DINAMANI 26 FEB 2007

# ஈஷா பள்ளியில் படைப்பாற்றல் வெளிப்படுத்தும் கருத்தரங்கம்

**கோவை, பிப். 26:** மாணவர்களின் படைப்புத் திறனை வெளிப் படுத்தும் கருத்தரங்கம் ஈஷா பள்ளியில் வியாழன், வெள்ளி இரு நாள்களும் நடைபெற்றது.

கோவையை அடுத்த வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் ஈஷா யோக மையத்தில் இப் பள்ளி செயல்பட்டு வருகிறது. குழந்தைகளின் இயற்கையான அறியும் ஆற்றலை மேம்படுத்தி அவர்களது தனித்திறனை மேம்படுத்தும் நோக்கத்தில் இப் பள்ளி தொடங்கப்பட்டது.

பள்ளியைப் பற்றிய எதிர்மறையான சிந்தனைத் தவிர்த்து கற் றலை இனிமையான அனுபவமாக மாற்ற பல்வேறு நடவடிக் கைகளை இப் பள்ளி மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகு தியாக படைப்புத் திறனை வெளிப்படுத்தும் பயிற்சிக் கருத்த ரங்கம் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியில் டாக்டர் வேலு சரவணன் குழந்தைகளுக் கான நாடகங்கள் குறித்து பயிற்சி அளித்தார். அழிந்து வரும் பாரம்பரிய விளையாட்டுகள், புதிர் போட்டிகள் மாணவர்க ளுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது.

அதோடு, வீட்டில் எளிதாகக் கிடைக்கக் கூடிய பொருள்க ளைக் கொண்டு பல்வேறு விதமான விளையாட்டு உபகரணங் களை தயாரிப்பது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

மாணவர்களிடையே சகோதரத்துவம், குழுப் பண்பு ஆகிய வற்றை வளர்க்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கருத்தரங்கின் நிறைவாக பயிற்சி பெற்ற குழந்தைகள் தாங்களே நாடகத்தை மக்களுக்கு நடத்திக் காண்பித்தனர்.